P.R.No.281 நாள்.19-05-2011

# பத்திரிக்கைச் செய்தி

இன்று (19.5.2011) மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்திரு கே.ஏ. ஜெயபால் அவர்கள் தமிழ்நாட்டின் கடலோர மீனவ கிராமங்களில் ஏற்படும் கடலரிப்பைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் மற்றும் பாதிக்கப்படும் மீனவ கிராமங்களில் தூண்டில் வளைவுகள் அமைப்பது குறித்தும் தலைமைச் செயலகத்தில் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இவ்வாலோசனைக் கூட்டத்தில் திருமதி எம்.பி. நிர்மலா, இஆப, அரசு செயலர், கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, திரு கே. செல்லமுத்து, இஆப, மீன்வளத் துறை ஆணையர், திரு ஜெகன்னாதன், மீன்பிடித் துறைமுகத் தலைமைப் பொறியாளர், மைய அரசின் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர் மற்றும் திட்ட ஆலோசகர் ஆகியோர் பங்கேற்றனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9